THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Tuesday, the 8th April 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : இன்றைக்கும் கூட 37 கேள்விகளுக்குமேல் இருக்கிறது. சீக்கிரமாக முடிப்பதற்கு கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் என்னுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Communist Party

* 49 *S.N.Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state the reasons for searching the Communist Party offices in several places on or about 17th March 1958 in Tanjore district and arresting a number of Communist Party members in the district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government regret that in the public interest they cannot disclose the reasons for the arrests and searches.

SRI V. K. KOTHANDARAMAN : சில நிலப்பிரபுக்களுக்கு உடந்தையாக இருந்து கொண்டு கம்யூனிஸ்டு பார்ட்டியைச் சேர்ந்தவர்களைப் போலீஸ் அதிகாரிகள் அரஸ்டு செய்தார்கள் என்பதை உணர்ந்து அந்தப் போலீஸ் அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நானும் அதைப்பற்றி விசாரித்திருக்கிறேன். கனம் அங்கத்தினர்கள் சொல்வது போல இல்லை அது வேறுவிதமாக இருக்கிறது. சில வழக்குகள் தொடரப்பட்டு இருக்கின்றன. இப்போது இன்னும் சில இன்வஸ்டிகேஷன் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இதைப்பற்றி விவரங்கள் ஒன்றும் சொல்வதற்கில்லை.

SRI M. KALYANASUNDARAM : இப்போது கைதி செய்யப்பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள். அவர்கள் மீது எந்தவிதமான குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்யப்படவில்லை, வழக்குத் தொடரப்படவில்லை. ஆகவே ஏன் இப்படி அனுவசியமாக கம்யூனிஸ்டுக் கட்சி காரியாலயத்தையும் சோதனை போட்டார்கள், அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களைக் கைதி செய்தார்கள் என்பதை விசாரணை செய்து போலீஸ் அதிகாரிகளின் பேரில் தவறு இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கத்தார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி நானும் விசாரித்தேன். இந்த நடவடிக்கை கூட மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவின் பேரிலேயே எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல்.

MR. SPEAKER : The Hon. Minister has already stated in his answer that he cannot disclose the reasons in the public interest. Anyhow, I will allow the hon. Member, Sri Palanisami, to put a supplementary question.

SRI N. K. PALANISAMI : கனம் அமைச்சர் அவர்கள் அந்த மாதிரியாகப் போலீசார் நடவடிக்கை எடுத்துக் கொண்டதற்குக் காரணம் வேறு ஏதோ இருப்பதாகச் சொன்னார்கள். கம்யூனிஸ்டு பார்ட்டி ஆபீசைச் சோதனை போட்டதில் அவர்களுக்கு ஏதாவது ஆட்சேபகரமான தஸ்தாவேஜிகள் கிடைத்திருக்கிறதா ? அதைப்பற்றிய விவரம் என்ன ?

[8th April 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்போது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. வழக்குகள் சில தொடரப்பட்டு இருக்கிறதென்று சொன்னேன். மேலும் இதைப்பற்றிய விவரம் ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

Electricity for agricultural purposes

* 604 Q.—SRI M. P. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the approximate number of pumpsets for which electricity connections are to be given for agricultural purposes during 1957–58; and

(b) the total number of electric motors expected to be made available for this State from local production?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 14,000.

(b) 2,218.

SRI S. M. ANNAMALAI : என்னுடைய கேள்வி முதல் பிரிவுக்கு 14,000 பம்பு செட்டுகளுக்கு 1957–58–ல் சர்விஸ் கொடுக்க திட்டமிட்டிருப்பதாகவும், ஆனால் நம்முடைய ராஜ்யத்தில் 2,218 மோட்டார்கள்தான் கிடைக்கும் என்றார்கள். இதனால் மோட்டார் விலைகள் அபரிமிதமாக ஏறிவிடாமல் இருக்க தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 2,818 மோட்டார்கள் என்பது நம்முடைய நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதைப் பற்றித்தான். அது போதாது என்று அந்நிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவும் கோரப்பட்டிருக்கிறது. ஓரளவு மத்திய அரசாங்கமும் அனுமதி அளித்து வருகிறார்கள்.

SRI T. T. DANIEL : May I know from the Hon. Minister whether there is any proposal before the Government to reduce the minimum charge on electricity in view of the fact that there are certain regions in the State where the agriculturists do not use even the minimum quantity of electricity during the course of the year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This question may be addressed to my colleague, the Minister for Electricity.

SRI A. R. SUBBIAH MUDALIAR : எந்தத் திட்டத்தின் கீழ் அந்நிய நாட்டிலிருந்து இவை வரவழைக்கப்படுகின்றன ? விவசாயிகள் நேரிடையாக வரவழைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நாட்டில் உற்பத்திசெய்யப்படுவதற்குமேல் அவசியம் இருந்தால் அந்த அளவுக்கு மத்திய அரசாங்கம் அனுமதி அளிக்கிறது. அவ்வாறு இறக்குமதி செய்வதில் மொத்தமாக எவ்வளவு என்று அனுமதிக்கிறார்கள். அவ்வாறு வரவழைக்க கம்பெனிகளுக்கு லைசென்சு வழங்கப்படுகிறது. இந்த அரசாங்கத்தின் கோரிக்கையின்பேரில் மத்திய அரசாங்கம் அவ்வாறு செய்கிறது.

SRI M. JAGANNATHAN : பம்பு செட்டுகள் அந்நிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யக் கோரப்படுகிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உதாரணமாக ஜப்பான் தேசத்திலிருந்து இங்கே இறக்குமதி செய்யவேண்டுமென்றாலும் நமக்கு நேரிடையாக வரவழைத்துக்கொள்ள முடியுமா ?